**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 209/2018 C/W OS 210/2018 C/W OS 262/2016</u>**

நாள் 15.10.2025

PW5 – P.முத்துக்குமாரசாமி

த/பெ – லேட். ஆறுமுகம்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of October 2025)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதிகள் அழைத்ததின் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு தற்போது 58 வயதாகிறது. நான் 7–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டதா? என்றால் நான் சொல்லவில்லை. வாதிகள் என்ன பரிகாரங்கள் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்து சம்பந்தமாக மோசடியாக கிரைய ஆவணங்கள் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லி வழக்கு போட்டுள்ளார்கள். இந்த வழக்கை யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சென்னிமலை கவுண்டர் வகையறாவிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

2. நான் இந்த வழக்கின் வாதிகளின் தாய்மாமா மகன் ஆவேன். தாவா சொத்துக்கள் கணியாம்பூண்டி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 4.50 ஏக்கர் ஆகும். நான் மங்கலம் பக்கம் உள்ள பள்ளியபாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் குடியிருந்து வரும் இடத்திற்கும், தாவா சொத்து உள்ள இடத்திற்கும் இடையே சுமார் 8

கி.மீ தூரம் இருக்கும். தாவா சொத்தை ஒட்டி குடியிருப்புகள் உள்ளது என்றால் இல்லை, 2,3 வீடுகள் தான் உள்ளது. எனக்கு சொந்தமாக பூமி எதுவும் இல்லை. இந்த தாவா சொத்து சம்பந்தமாக 3 வழக்குகள் நடந்து வருகின்ற விபரம் எனக்கு தெரியும்.

3. தாவா சொத்துக்கள் ஆதியில் 1–ம் பிரதிவாதி சென்னிமலை கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை சென்னிமலை கவுண்டர் சுயமாக கிரையம் பெற்றார். சென்னிமலை கவுண்டர் அவிநாசி, மத்திய கூட்டுறவு வங்கியில் எந்த தேதியில் கடன் வாங்கினார் என்றால் தேதி எனக்கு தெரியாது, பவர்லூம் அமைப்பதற்காக வேண்டி கடன் வாங்கினார். எவ்வளவு தொகை கடனாக வாங்கினார் என்று எனக்கு தெரியாது. சென்னிமலை கவுண்டர் வாங்கிய கடனை திருப்பி செலுத்தாததால் தாவா சொத்துக்கள் ஏலத்திற்கு வந்த விபரம் எனக்கு தெரியும். அந்த கடனை வாதிகள் தான் கட்டி அடைத்தார்கள். எவ்வளவு தொகை கட்டி முடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. சென்னிமலை கவுண்டர் கடன் வாங்கிய விபரமும் எனக்கு தெரியாது என்றும், அந்த கடனை கட்டாததால் சொத்துக்கள் ஏலத்திற்கு வந்த விபரம் எனக்கு தெரியாது என்றும், இந்த நிலையில் வாதிகள் அந்த கடனை கட்டி அடைத்தார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சென்னிமலை கவுண்டர் அவர் வாங்கிய கடனை அவருடைய சொந்த பணத்தை கொண்டு தான் கடனை அடைத்து சொத்தை மீட்டார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சியமளிக்க வரவேண்டி வாதிகள் எனக்கு ஒரு மாதத்திற்கு முன்பு சொன்னார்கள். ஆனால், இந்த வழக்கு நடக்கின்ற விபரம் எனக்கு ஏற்கனவே தெரியும். 2–ம் பிரதிவாதி நடராஜ் சொத்தை விற்க முயற்சி செய்து வருவதாக வாதிகள் 2008–ம் ஆண்டில்

சொல்லி எனக்கு தெரியும். தாவா சொத்துக்களை பொறுத்து 1–ம் பிரதிவாதி சென்னிமலை கவுண்டர் என்னென்ன ஆவணங்களை எழுதி வைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. ஆனால், அந்த பத்திரங்களை நான் பார்த்துள்ளேன். அவர் வாதிகளுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை 2006–ம் ஆண்டில் பார்த்துள்ளேன், தேதி மாதம் ஞாபகம் இல்லை. அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை. அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் வாதிகளுக்கு சொத்தை எழுதி வைப்பதாக சொல்லி தான் கண்டு எழுதப்பட்டிருந்தது. அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் பற்றிய விபரம் எனவும் எனக்கு தெரியாது என்றும், வாதிகள் சொல்லி தான் தானசெட்டில்மெண்ட் பத்திரம் பற்றிய விபரத்தை சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வாதிகள் பெயரில் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை சென்னிமலை கவுண்டர் ரத்து செய்து விட்டார் என்றால் சரிதான். அந்த தானசெட்டில்மெண்ட் ரத்துபத்திரத்தில் வாதிகள் சென்னிமலைகவுண்டரை சரிவர கவனிக்காமல் வீட்டை விட்டு வெளியே அனுப்பி நம்பிக்கை மோசடி செய்து விட்டதால் தான் வாதிகள் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்வதாக சொல்லி தான் அதில் வாசகம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வாதிகள் சென்னிமலை கவுண்டரை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டதால் அவரை அவரது மகனான 2–ம் பிரதிவாதி நடராஜ் தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. சென்னிமலை கவுண்டரை நடராஜ் நல்ல முறையில் பார்த்து வந்ததால் தான் அவர் மீது பொறாமை கொண்டு சொத்தை 2–ம் பிரதிவாதி நடராஜ் சொத்தை விற்பனை செய்ய முயற்சி

செய்து வருவதாக பொய்யான காரணங்களை சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4. தாவா சொத்தை 8–ம் பிரதிவாதி லோகநாதன் தான் கிரையம் பெற்றுள்ளார். அவ்வாறு கிரையம் பெற்ற விபரம் எனக்கு 2 மாதம் கழித்து தெரிய வந்தது. 8–ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய தேதி எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்திற்கு 8–ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா, சிட்டா, அடங்கல் கணக்கு போன்ற வருவாய் ஆவணங்கள் இருந்து வருகிறது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு வாதிகள் பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்து வருகிறதா? என்று எனக்கு தெரியாது. வாதிகள் பெயரில் எந்தவொரு வருவாய் ஆவணமும் இல்லை என்றும், அதனால் தான் அது சம்பந்தப்பட்ட ஆவணம் எதுவும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், இருந்தும் நான் வாதிகள் பெயரில் வருவாய் ஆவணம் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. நல்லி சண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகியோரை எனக்குத் தெரியாது. அவர்கள் தாவா சொத்தை நீதிமன்றம் மூலம் கிரையம் பெற்ற விபரம் எனக்குத் தெரியும். அந்த கிரைய பத்திரத்தை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். அவர்களிடம் இருந்து தான் 8–ம் பிரதிவாதி தாவா சொத்தை 10.11.2011–ம் தேதியில் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். தாவா சொத்தில் தகராறு நடந்ததாக சொல்லும் தேதி எனக்கு தெரியுமா என்றால் 6,8,9,14 தேதிகளில் நடந்துது. ஆனால் மாதம், வருடம் எனக்கு தெரியாது. அந்த தகராறு நடந்ததை நான் நேரில் பார்க்கவில்லை, காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். சம்பவம் நடந்த நாளே காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். அந்த சம்பவம் பற்றிய விபரம் 2–ம் வாதி

சுந்தராம்பாளின் மகன் கார்த்திக் சொல்லி தான் எனக்கு தெரியும். நான் சொல்வது பொய் என்றும், நான் சொல்வது போல எந்தவொரு சம்பவமும் நடக்கவும் இல்லை, அதற்காக நான் காவல் நிலையம் செல்லவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்ததால் அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் குற்ற வழக்கு பதிவு செய்திருப்பார்கள் என்றும், அதுபோல சம்பவம் எதுவும் நடக்காததால் தான் வழக்கு எதுவும் பதியவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு 8–ம் பிரதிவாதி தான் உரிமையாளர் என்றும், கிரையம் பெற்ற நாள் முதல் 8–ம் பிரதிவாதி தான் முள்வேலி அமைத்து ஆட்களை கொண்டு விவசாயம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அதனால், தாவா சொத்தை வாதிகள் எந்த காலத்திலும் அனுபவித்து வந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 8–ம் பிரதிவாதி ஒரு தொழிலதிபர் என்பதால் அவரிடமிருந்து குறுக்கு வழியில் பணம்பறிக்க வேண்டி நாங்கள் எல்லோரும் சேர்ந்து பொய்யாக வழக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.10.15 15:08:15 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**